# காலிங்கராயன் கால்வாய்

[ஆசிரியர்: செ.இராசு, வெளியீடு: கொங்கு ஆய்வு மையம், 5, என்.ஜி.ஓ. காலனி, ஈரோடு-638009; பக்கங்கள்: 148; விலை: ரூ.10-00]

பண்டைத் தமிழ்நாட்டைச் சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் தொண்டை நாடு, கொங்கு நாட்டையும் சேர்த்து ஐந்து நாடுகள் எனக் கருதும் வழக்கம் இருந்தது. இதில் கொங்கு நாட்டில் உள்ள ஈரோடு பகுதி காலிங்கராயன் கால்வாய் குறித்த வரலாற்று நூல் இது.

காலிங்கராயன் என்பவனால் வெட்டப்பட்ட கால்வாய் என்பதால் இது காலிங்கராயன் கால்வாய் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

காலிங்கராயன் என்ற பெயர், பல மன்னர்களின் அரசியல் தலைவர்கட்கு மட்டுமின்றித் தங்களுக்கு மிக விருப்பமான பிறவற்றிற்கும் 'காலிங்கராயன்' என்று பெயரிட்டு மகிழ்ந்ததைக் கல்வெட்டு மற்றும் பிற ஆதாரங்கள் மூலம் விரிவாகக் கூறி, கொங்கு நாட்டில் பிற்காலத்தில் இப்பெயரில் தலைவர் ஒருவரும் இல்லாததை நோக்கிப் பாண்டியர் நாளில் இருந்த காலிங்கராயனே அணைகட்டி கால்வாய் வெட்டினார் என்ற முடிவுக்கு வருகிறார் ஆசிரியர். இதன் காலம் கி.பி.1265 ஆகும்.

இந்தக் காலிங்கராயனின் சிறப்புகள், அவனின் அருங்குணங்கள், அவனைத் தெய்வமாக வழிபடுதல் இப்படிப் பல கோணங்களில் காலிங்கராயன் பற்றி விரிவாக உரிய ஆதாரங்களுடன் கூறுகிறார் ஆசிரியர்.

இதே போல அவன் வெட்டிய கால்வாய் பற்றிய வரலாறு, அதன் சிறப்பு, வழிவழியாய் அதன் பராமரிப்பு, நிர்வாகம் அன்றும் இன்றும் எப்படி என்பது போன்ற விஷயங்களை நுணுகி ஆய்வு செய்து நமக்குத் தெளிவாக்குகிறார்.

சிற்சில இடங்களில் கல்வெட்டின் அதே வரிகளைக் குறிப்பிட்டிருப்பதும் இந்நூலின் சிறப்பு. நூலின் பிற்சேர்க்கையில் காலிங்கராயன் கல்வெட்டு. 'அணைகட்டிய பட்டயம், முதலானவற்றை அப்படியே தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் காலிங்கராயன் பதவியை மட்டும் வகிக்காமல் சீரிய பணியையும் செய்ததால் அவரது புகழ் இன்றும் நிலைப்பதை நினைவு கூரல் வேண்டும்.

இந்நூல் சாதனைபுரிந்த சாதனையாளரின் வரலாறு மட்டுமன்றி, அதனைப் பறைசாற்றும் முரசாகவும் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல.

—இராம.பழ.அதியமான்

1987

முதல் பதிப்பின் மதிப்புரை

" தினமணி "